1979 மார்ச் 13]

இருந்து வடியக்கூடிய தண்ணீர், 4 அடி பள்ளத்தில் உடனடியாக விழுந்து பரவனாறு வழியாக வடிகிறது. அதை பெருமாள் ஏரியின் வடக்குப் பகுதியில் வடிமுனை அமைத்து கடலில் கலக்கும் வகையில் செய்ய ஒரு திட்டம் புதியதாகத் தயாரிக்கப் பட்டு இருப்பதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்தின் விவரம் என்ன? அதைப் பரிசீலனை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் துரை கலியமூர்த்தி அவர்கள் குறிப்பிடுகிற அந்தத் திட்டம் அரசின் பரிசீலனைக்கு இன்னும் வரவில்லை. அவர்கள் விவரமாகத் தனிக்கேள்வி போட்டால் அதற்குரிய பதிலைச் சொல்கிறேன்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை.

* வினா எண் 378—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பலமான தலைக்காயங்களுக்கு சிகிச்சையளிக்க விசேஷ பிரிவு இல்லாதது உண்மையா?

(ஆ) ஆம் எனில், கோவை நகரில் இம்மருத்துவ மனையில் இப்பிரிவு (Neurology Department) ஏற்படுத்த ஆலோசனை உள்ளதா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்).

(அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, விடை ஆம்; தற்போது இல்லை என்று சொல்கிறார்கள். அவர் சொன்ன பதில் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அங்கே கோயம்புத்தூர் மருத்துவ மனையில் தலைக்கு ஏற்படும் காயங்களுக்கு ஒரு நல்ல வார்டு தயார் செய்து, 32 படுக்கைகள் தயார் செய்து, எக்ஸ்ரே மெஷின் வாங்கி வைத்து, ஸ்டாப் சாங்ஷன் ஆகாததால், டாக்டர்கள் மற்றவர்கள் சேவை செய்யாமல் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அதை தொடங்குவதற்கு ஸ்டாப் சாங்ஷன் உடனடியாகச் செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். பிறகு, இரண்டுக்கும் சேர்த்து துணைக்கேள்விகள் போடலாம்.